Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 67/2023 PW-1**

Name : சின்னப்பன்
Father / Husband name : தேவசகாயம்
Village : புறங்கரை
Age : 50
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 18.07.2025

A1 to A3 present.

<u>**முதல் விசாரணை**</u>

நான் கூட்டுறவு சொசைட்டில் கிளார்க்காக பணிபுரிகிறேன். சாட்சி சார்லஸ் எனது அண்ணன் மகனை நான் வளர்த்துவருகிறேன். சாட்சிகள் ராயப்பன், சகிலா ஆகியோர்கள் எனது உறவினர்கள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 28.02.2023 ம் தேதி நானும் எனது அண்ணன் மகன் சார்லஸ் என்பவரும் வீட்டில் பேசிக்கொண்டிருந்தபோது புறங்கரை கிராமத்தை சேர்ந்த செல்வம், அந்தோனியம்மாள், ரெஜினாமேரி ஆகியோர்கள் மூன்றுபேரும் கருங்கல் மற்றும் தடியை எடுத்துவந்து எங்களை பார்த்து தேவிடியா பசங்காளா, அப்பா அம்மா இல்லாத நாதாருங்களா உங்களை அடித்தால் யாரும் கேட்க நாதி இல்லை என திட்டி, 1வது எதிரி செல்வம் சார்லசை இடது கண்புறுவத்திற்கு அருகே தடியால் அடித்தார். 2 எதிரி அந்தோணியம்மாள் கருங்கல்லால் சார்லசை வலது புற மேல் உதட்டில் கருங்கல்லால் குத்தி இரத்தக்காயம் ஏற்படுத்தினார், அதில் சார்லசுக்கு ஒரு பல் ஆடிக்கொண்டிருந்தது.

2. 3வது எதிரி ரெஜினாமேரி எங்கள் இருவரின் சட்டையை பிடித்து இழுத்து கையால் எங்கள் நெஞ்சில் குத்தினார். நான் வலிதாங்க முடியாமல் சத்தம்போட்டேன். உடனே பக்கத்திலிருந்த ராயப்பன், சகிளா மற்றும் சில நபர்களும் வந்தார்கள். 1வது எதிரி செல்வம் தடியைவைத்துக்கொண்டு

ஒழித்துகட்டிவிடுவேன், என் கையால் தான் உனக்கு சாவு என்று எங்களை மிரட்டினார். அதன்பின்னர் சார்லஸ் அழைத்துக்கொண்டு ஒலக்கூர் காவல் நிலையம் சென்றேன், சார்லஸ்க்கு இரத்தக்காயம் இருந்ததால் மருத்துவமனைக்கு செல்லுமாறு சொன்னார். உடனே திண்டிவனம் மருத்துவமனைக்கு சென்றோம். சார்லசுக்கு வலது மேல்பல் ஒன்று சேதமானது. சார்லஸ்க்கு மேல்உதட்டில் வலது புறம் 6 தையலும், இடது பிற கன்னத்தில் 5 தையல் போட்டார்கள். பின்னர் இதுசம்மந்தமாக 01.03.2023 அன்று ஒலக்கூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். புகாரை நான் தான் எழுதிகொடுத்தேன். **சாட்சியின் கையொப்பத்துடன் கூடிய அசல் புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சார்லஸ்க்கு தற்போது வரை கண்பார்வை குறைபாடாக உள்ளது. என்னிடம் காட்டப்படும் கருங்கல்லால் தான் சார்லசை அடித்தார்கள். **அந்த கருங்கல் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எங்களை தாக்க பயன்படுத்தப்பட்ட தடியை பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும். என்னிடம் காட்டப்படும் தடியால் தான் எங்களை அடித்தார்கள். **அந்த தடி அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.